# வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா
# VELANAI CENTRAL COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION - CANADA
(A Non-Profitable Organization)

4 Maple Beach Cres., Brampton, ON, L7A 2T9, Canada | **Tel:** 416-949-7795 / 416-562-4141 | **Fax:** 905-970-0450



**President**
S. Elancheliyan

**Vice President**
K. Kalyanasundaran

**Secretary**
S. Sivakumar

**Assistant Secretary**
S. Thayalan

**Treasurer**
S. Sritharan

**Auditor**
R. Murugan

**Committee Members**
P. Balasundaram
Pirabu Ponnampalam
K. S. Kathirgamanathan
S. Mahapooranan
Lokan Sundaram
P. Karunakaran
T. Mohanathas
R. Ruthirakanthan
S. J. Sothy
T. Ilamurugan

**Patrons**
S. Sivaloganathan
A. Ariyaratnam
A. Senthilvadivel
A. Balendran
K. Gnanachchemmal


பேரன்புடையீர்,

எமது சங்கத்தால் வருடாவருடம் நடாத்தப்படும் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பில் முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இயந்திரகதியான மேற்கத்தைய வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அனைவரும் ஓர் இனிய பொழுதை இன்பமாகக் கழித்திட இங்கு ஒன்று கூடியிருக்கும் அதேவேளையில், தாயகத்தில் எமது சகோதர மாணவர்கள் எதிர்நோக்கியிருக்கும் இன்னல்களையும் சற்றுச்சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்த வகையில் எமது கல்லூரியிலிருந்து நேரடியாகப் பல்கலைக்கழகம் சென்ற பொருளாதார வசதியற்ற மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை கடந்த யூன் மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம். தற்பொழுது இத்திட்டத்தின் மூலம் மாதம் ஒரு மாணவருக்கு தலா 3000.00 (இலங்கை ரூபா) வீதம் 38 மாணவர்களுக்கு மாதாமாதம் 114000.00 ரூபாக்களை அனுப்பி வருகின்றோம் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| யாழ் பல்கலைகழகம் | - 28 | மாணவர்கள் |
| கிழக்குப் பல்கலைகழகம் | - 09 | மாணவர்கள் |
| பேராதனைப் பல்கலைகழகம் | - 01 | மாணவர் |

தீவகமும் அதன் தலைசிறந்த கல்விக்கூடமான வேலணை மத்திய கல்லூரியும் இன்று எதிர்கொள்ளும் சவால்களில் வெற்றியீட்டுவதற்கு எமது சங்கம் தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கும் எனவும் அதற்கான முயற்சிகளில் தற்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதனையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இச்சீரிய பணி தொடரத் தங்கள் நல்லாதரவு தொடர வேண்டுமெனவும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*

வணக்கம்

நன்றியுடன்

சி. இளஞ்செழியன்
தலைவர்
14-08-2011


**Email:** vccosacanada@gmail.com | **Website:** www.vccosacanada.com

பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

தலைவர்/ செயலாளர்
வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா
கனடா.

**கனடா வாழ் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அனைவருக்கும்,**

வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்று அப்பாடசாலையிலிருந்தே பல்கலைக்கழகம் புகுந்துள்ள மாணவர்களுக்கு நிதி உதவி செய்வதற்கு தீர்மானம் எடுத்து அதனை 2011ம் ஆண்டு யூன் மாதம் முதல் அமுல் நடாத்தி வருகின்றமைக்காக வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க (கனடா) உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

"அன்னசத்திரம் ஆலயம் அமைத்தல் ......... அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் " என்றான் பாரதி. நமது தீவுப்பகுதி மக்கள் வெளிநாட்டில் வாழ்பவர்களும் சரி உள்நாட்டில் இருக்கின்ற வர்த்தகப் பெருமக்களும் சரி கடந்த பத்தாண்டுகளாக கோவில்களைப் புனரமைப்பதிலும், திருவிழாக்களை நடாத்துவதிலும் ராஜ கோபுரங்கள் கட்டுவதிலும் மணிமண்டபங்கள் கட்டுவதிலும் சிறிய சிறிய கோவில்கள் கட்டுவதிலும் கோடி கோடியாக பணத்தை வாரி இறைக்கின்றார்கள். அவ்வாறு செலவு செய்யும் பணத்தில் ஐந்து சதவீதத்தைத் தன்னும் தீவுப்பகுதியின் கல்வி நிலையை உயர்த்துவதற்கு செலவு செய்யவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்நிலையில் நீங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும். வெளிநாட்டில் உள்ளவர்கள் தீவுப்பகுதி கல்வி முன்னேற்றத்திற்காக பணத்தை அனுப்பவில்லை என்று இங்கு நான் கூறவில்லை. ஆனால் கல்வி அபிவிருத்திக்காக அனுப்பியமை இங்குள்ள தேவையுடன் ஒப்பிடும் போது மிகவும் சொற்பமாகும். லண்டன், பிரான்ஸ், அவுஸ்ரேலியா போன்ற இடங்களில் வாழும் வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களும் பாடசாலைக்கு வேறு வகையில் நிதி உதவி செய்கின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்..

1991ம் ஆண்டின் இடப் பெயர்வின் பின் தீவுப்பகுதிகளின் கல்வி நிலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது அந்நிலையில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. வேலணை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு தற்போது 38 மாணவர்கள் கல்வியைக் கற்றுக் கொண்டு வருகிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 28 மாணவர்கள்,
கிழக்குப் பல்கலைக்கழகம் 09 மாணவர்கள்,
பேராதனைப் பல்கலைக்கழகம் 01 மாணவர்.

இவர்கள் அனைவரும் கலைப் பாடங்களைப் பயில்கின்றார்கள் என்பது கவனிக்கத்தக்கது. அதிகமாக கலைப்பீடத்தில் கற்கும் மாணவர்களில் 90 சதவீதத்தினர் கிராமப்புறங்களைச் சார்ந்தவர்களாகவும் வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்து வருபவர்களாகவும் அவர்களது பரம்பரையில் முதன் முதலில் பல்கலைக்கழகம் புகுந்தவர்களாகவும் இருப்பார்கள். மேலே குறிப்பிட்ட மாணவர்களுக்கும் இவை பொருந்தும். இவர்கள் யுத்த காலத்தில் பிறந்து, யுத்தம் ஏற்படுத்திய பிரச்சனைகளுக்குள் வளர்ந்து படித்து பல்கலைக்கழகம் புகுந்தவர்கள். எனவே இவர்களுக்கும் இனிமேலும் எமது கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கும் வெளிநாடுகளில் வாழும் மக்கள் உதவி செய்ய வேண்டியது

தார்மீகக் கடமையாகும். அதனை உணர்ந்து உங்கள் சங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கையைப் மனமாரப் பாராட்டுகின்றேன்.

ஆண்டவன் அருளால் வெளிநாடுகளில் வாழ்கின்ற நீங்கள் இங்கு வாழும் மக்களை விட பன்மடங்கு வசதியுடன் வாழுகின்றீர்கள். நீங்கள் உமது பரம்பரைக் கிராமங்களில் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக உங்கள் வருட வருமானத்தில் ஒரு சதவீதத்தை அல்லது நாளொன்றுக்கு ஒரு டொலரை வழங்குவேன் என்ற உறுதி மொழியை இன்றே எடுத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்யும் உதவியைத் தான் இறைவனும் விரும்புவார்

வேலணை மத்திய கல்லூரியின் முன்னேற்றத்திற்காகவும், அதன் அயலிலுள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் பின்வரும் விடயங்களை நிறைவேற்றும் வகையில் நிதியுதவியை மேற்கொள்ளலாம்.

1. கிராமங்கள் தோறும் முன்பள்ளிகளை திறம்பட நடாத்துதல்
2. கிராமங்கள் தோறும் க.பொ.த சாதாரண வகுப்பு வரை இலவசமாக தனியார் போதனா வகுப்புக்களை நடாத்துதல்
3. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு விசேட ஆசிரியர்களை வேலைக்கமர்த்தி மாணவர்களுக்கு கற்பித்தல்
4. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக விசேட ஆசிரியர்களை வேலைக்கமர்த்தி உதவி செய்தல்
5. வேலணை மத்திய கல்லூரிக்கு தேவையான பௌதீக உபகரணங்கள், கணணிகள், நூல்கள் வழங்குதல்
6. பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் போன மாணவர்களுக்கு நிதி உதவி செய்து வெளிவாரியான முறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய உதவுதல்

இன்னும் பல விடயங்களைக் கூறலாமெனினும் சுருக்கம் கருதி இத்துடன் நிறுத்துகின்றேன்.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா எடுத்துள்ள முயற்சி பாராட்டத் தக்கது. உங்களைப் பின்பற்றி ஏனைய தீவுப்பகுதி சங்கங்களும் தத்தம் தீவுகளிலிருந்து பல்கலைக்கழகம் சென்றுள்ள மாணவர்களுக்கு நிதி உதவி செய்ய முன்வருதல் வேண்டும். நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, காரைதீவு(நகர்) போன்ற இடங்களிலிருந்து, படித்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழைந்திருக்கின்றாகள். அவர்களுக்கு அவ்வூரைச் சேர்ந்த கனடாவிலும், வேறு நாடுகளிலும் உள்ள பழைய மாணவர் சங்கங்கள், உங்களை முன்மாதிரியாகக் கொண்டு உதவி செய்ய முன்வருவார்கள் என நம்புகின்றேன்.

2011ம் ஆண்டு வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் ஒன்று கூடல் மிகச்சிறப்பாக நடைபெற வேண்டுமென்று வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையிலும் கனடாப் பிரஜை என்ற வகையிலும் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

ந. பேரின்பநாதன்
முதுநிலை விரிவுரையாளர் - தரம் I
பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

ஏ. வசந்தி
வேலணை கிழக்கு
வேலணை
10.7.2011

வேலணை மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடா

சேவைக்குரிய தலைவர் அவர்கட்கும் சக நிர்வாக உறுப்பினர்களுக்கும் எனது நன்றி உணர்வோடு எழுதும் மடல் எமது உயர்கல்வியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு எமது கல்வியை நாம் தொடரும் போது பொருளாதாரப் பற்றாக்குறையால் எமது திறமை வாழ்வில் தாக்கம் ஏற்படலாம் என்று சிந்தித்து அதில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டும் என எண்ணிய பேரெண்ணத்தை நன்றியுடன் வரவேற்று நிற்கின்றோம் நாம்

பல்கலைக்கழகத்தில் பயிலும் போது பலதரப்பட்ட செலவுகள் உண்டு ரியுசன்க்கான (பண செலவு) கற்கை நெறிக்கான உபகரணங்கள் இவை யாவும் பெற்றோரால் ஈடு செய்யும் போது பற்றாக் குறைகளும் ஏற்படுவது உண்டு இந்த நேரத்தில் தங்களின் உதவிப் பணம் எமக்குப் பெரும் ஆறுதலை தருகின்றது உண்மையாகவும் எங்கள் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகளை நாமும் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என எண்ணிய சிந்தனை பாராட்டுக்குரியது நன்றி வாழ்க என வாழ்த்துகின்றேன்

அத்துடன் தங்களுக்கும் எங்களுக்கும் இணைப்பு பாலமாகச் சேவையாற்றி தங்களின் உதவியை எமக்குப் பெற்றுத் தர ஒத்துழைப் பெரியவர்கள் இருந்தும் முன் வராமைக்கு வருந்துகின்றேன் இந்த நிலையில் எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய யோகேந்திரநாதன் ஐயா ~~அதி~~ பொறுப்பையேற்று வழிவுரையாளர் அவர்கள் முன்னின்று பொறுப்பேற்று உதவியமைக்காக சிரம் தாழ்த்தி அவரது சேவையை பாராட்டுகின்றேன் என்றென்றும் தங்களது சங்கம் வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்

இங்ஙனம்
உண்மையுள்ள
ஏ. வசந்தி

செ. றசீனா
வேலணை மேற்கு
வேலணை

வேலணை மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடா

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களுக்கும் சக நிர்வாக உறுப்பினர்களுக்கும் உங்களின் சேவையைப் பாராட்டி வேலணை மத்திய கல்லூரி மாணவியும் யாழ் பல்கலைக் கழக மாணவியுமாகிய றசீனா எழுதிக் கொள்வது.

உங்களுடைய இந்த மாதாந்தத் தொகையானது எனக்கு பல வழிகளில் எனது படிப்பு உபயோகத்துக்கு உதவுகின்றது கடல் தொழிலை நம்பி வாழும் எங்களைப் போன்றவர்கள் தந்தையின் வருமானத்தையே நம்பி நாளும் எனது குடும்பமும் வாழ்கின்றோம் தந்தையின் வருமானம் எனது குடும்பத்தின் தேவைக்கே போதவில்லை ஆகவே எங்களைப் போன்றவர்கள் எமது படிப்பைத் தொடருவதற்கு பெரும் கஷ்டத்தின் மத்தியில் உள்ளோம் நீங்கள் கடந்த மாதம் அனுப்பிய மாதாந்தத் தொகை மூலம் என்னுடைய கஷ்டம் ஓரளவு குறைந்து விட்டது உங்களுடைய இந்தத் தொகை மூலம் என்னுடைய படிப்புச் செலவு குறைந்து என்னுடைய மனதுக்கு நின்மதியைத் தருகின்றது இதுபற்றி நான் என்னுடைய குடும்பத்தாருக்கு அறிவித்தேன் முதலில் மகிழ்ச்சி அடைந்தது அவர்கள் தான் அவர்கள் உங்களுடைய சேவையைப் பாராட்டினார்கள் எமக்கு எத்தனையோ உறவுகள் இருந்தும் எமக்கு உதவிக்கரம் நீட்டவில்லை ஆகவே நீங்கள் எமக்கு எனது படிப்புக்கு பொருளியல் துறை விரிவுரையாளர் மதிப்பிற்குரிய கனம் ஐயா பேரின்பநாதன் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு உதவியமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களுடைய சேவையை மனமார்ந்த வாழ்த்தும்
யாழ் பல்கலைக்கழக மாணவி

செ. றசீனா.

சரவணை கிழக்கு,
வேலணை.

வேலணை மத்திய
கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
கனடா.

கனடா பழைய மாணவர் சங்கத்தினால் வேலணையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் வந்த மாணவர்களாகிய எமக்கு வழங்கப்படுகின்ற இந்த உதவித்தொகையான புலமைப்பரிசில் தொகை கஷ்டத்தின் மத்தியில் பல்கலைக் கழகத்தில் கற்று வரும் என் போன்ற ஏனைய அனைத்து மாணவர்களுக்கும் பெரும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருக்கின்றது. எனவே இவ் உதவித் தொகையினை வழங்குகின்ற கனடா பழைய மாணவர் சங்க தலைவர், ஏனைய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு. இச் சேவையினை தொடர்ந்து நடத்தும் கனடாவில் வாழும் எனது பாடசாலை பழைய மாணவர்களுக்கு இச் சேவைக்காக வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
S. Tharsiny.
யாழ் பல்கலைக்கழகம்
3ம் வருடம்.

கி. யாழினி
புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.
12.07.2011.

தலைவர் / செயலாளர்
வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா.
கனடா.

வணக்கம். ஐயா!

மதிப்பிற்குரிய வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் அவர்கட்கு. தங்களுடைய உதவிக்கு மிக்க நன்றி கூறி நான் கிந்திர துறையில் 12ம் வருடமாணவியாக கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றேன். எங்களுடைய பாடத்தின் விருத்தியினை காக்க உங்களுடைய உதவி மிக்க சாதனமாக அமைந்தது. உங்களுடைய உதவி பேருதவியாக அமைந்தது. இவ்வுதவி நான்கு வருடங்களும் கிடைக்க வேண்டும் என்றும் அதற்காக இறைவனை வேண்டி உங்கள் உதவிக்காக நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி.
உண்மையுள்ள,

K. [signature]

க. தேவபாலன்.
வேலணை கிழக்கு
வேலணை-02.

பழைய மாணவர் சங்கம்.
வேலணை மத்திய கல்லூரி
கனடா.

நன்றி தெரிவித்தல் தொடர்பானது

எனது பாடசாலையில் படித்து பல்கலைக்கழகம் வந்துள்ள நான் பல சோதனைகளையும், கஷ்டங்களையும் எதிர்நோக்கி வந்துள்ளேன். போக்குவரத்து பிரச்சினை, பணப்பிரச்சினை எப்போதும் கஷ்டத்தை தந்துள்ளது மேலும் எனது பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளுக்கு அத்தியாவசிய உபகரணங்கள் போதாமையால் இக்கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படுகின்றது. எனினும் தங்கள் நன்கொடையில் பணம் கிடைத்த காரணமேனும் மடிக்கணனி பெறுவதற்கு உதவியாய் இருக்கின்றது. எனவே கனடா பழைய மாணவர் சங்கத்திற்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
K. Thya

க. ஜெயந்தி
பருத்திப்பட்டு
உளுந்தூர்பேட்டை.
12.07.2011.

தலைவர் / செயலாளர்.
வேலம்மாள் மருத்துவக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் மதுரை,
மதுரை.

## நன்றி தெரிவித்தல்

ஐயா, தலைவர் / செயலாளர் அவர்களுக்கு. வேலம்மாள் மருத்துவக்கல்லூரி-யில் கல்வி கற்று தற்போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் இளம் அறிவியல் மூன்றாம் வகுப்பில் கல்வி கற்றுவரும் க. ஜெயந்தி ஆகிய நான் தங்களுடைய பெரும் உதவியினை எனக்கு பெற்றுத்தந்தமைக்கு முதற்கண் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

உங்களுடைய இவ்வுதவியானது எனது கல்விக்கு பெரும் பங்களிப்பு செய்கிறது. இதனை நான் எப்பொழுதும் மறக்க மாட்டேன். இவ்வுதவி ஏழை எளிய மாணவர்-களின் கல்விக்கு உறுதுணையாக இருப்பதால் இதனை தாங்கள் தொடர்ந்து அளித்துவருமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
K. Jeyanthi

ந. விஜேந்திரா.
வேலணை கிழக்கு.
1ம் வட்டாரம்.
11/07/2011.

வேலணை மத்திய கல்லூரியின்
பழைய மாணவர் சங்கம்,
கனடா

ஐயா!

மதிப்பிற்குரிய வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் அவர்கட்கு தங்களின் வேலணை மத்திய கல்லூரியில் கற்று தற்போது இணைந்துள்ள இரண்டாம் வருடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ந. விஜேந்திரா ஆகிய நான் [2009/V/58] உங்களுடைய கருணையுள்ளத்துக்கு முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

எனது கல்வியானது நான் உறவுகளைக் கொண்டு தற்போது இரண்டாம் வருடத்தில் கற்றுக் கொண்டு இருக்கிறேன் உங்களுடைய இந்த உதவியானது நிச்சயம் எமது கிராமத்து மாணவர்களுக்கு பேருதவியாக இருக்கும் என நினைக்கின்றேன் இந்த உதவி எங்களுக்கு மட்டுமல்ல இன்னும் பல சகோதரர்களும் பெற வேண்டும் என்பதே எனது நோக்கம் எனவே இந்த உதவியை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம் தொடர்ந்தும் இவ் உதவி கிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டி மீண்டும் நன்றி கூறி இம்மடலை நிறைவு செய்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
உண்மையுள்ள மாணவன்
ந. விஜேந்திரா